சுற்றுநிருப இல: 1993/21

எனது இல: விஞ்/3/5/கொள்
விஞ்ஞானக் கிளை
கல்வி, உயர்கல்வி கலாசார அமைச்சு.
''இசுருபாய''
பத்தரமுல்ல.

சகல மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,

அரசாங்கப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள்,
இரசாயனப் பொருட்கள் பெறுதலும், பகிர்ந்தளித்தலும்

அரசியல் யாப்பின் 13ஆம் திருத்தத்தின் பிரகாரம் பட்டியல் 1 இன் (மாகாண சபைப்பட்டியல்) பின்னிணைப்பு 111ன் 22ஆவது விடயத்தின் பிரகாரம், அமைச்சினால் குறிப்பிடப்பட்ட சில விசேட பொருட்களை விட ஏனைய பொருட்களைப் பெறுதலும், பகிர்ந்தளித்தலும் மாகாணங்களின் செயற்பாடாகும்.

இதனையொட்டி உங்களால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை கீழே தரப்பட்டுள்ளது.

1.0 <u>விஞ்ஞான உபகரணங்களையும், இரசாயனப் பொருட்களையும் பெறுதல்</u>

1.1 விஞ்ஞான உபகரணங்கள், இரசானப்பொருட்கள் என்பவற்றில் இவ்வமைச்சினால் குறிக்கப்பட்ட பொருட்களைத்தவிர ஏனைய பொருட்களைப் பெறுதல் உங்கள் பொறுப்பாகும். மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் உங்களுக்கு அனுப்பப்பட்ட அமைத்த ஒதுக்கீட்டிலிருந்து இதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளவும்.

1.2 அரசாங்கப் பாடசாலைகளுக்கு வழங்கவேண்டிய விஞ்ஞான உபகரணங்களையும், இரசாயனப் பொருட்களையும் தேசிய கல்வி நிறுவகம் இனங்கண்டுள்ளது. இந்த உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும் கீழே தரப்பட்டுள்ள இரண்டு பட்டியல்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) ஆண்டு (6-13) இற்குத் தேவையான விஞ்ஞான உபகரணங்களின் நியமப்பட்டியல் (பின்னிணைப்பு 1) அத்துடன்

(ஆ) ஆண்டுகள் (4,5) இற்குத் தேவையான விஞ்ஞான உபகரணங்களின் நியமப்பட்டியல் (பின்னிணைப்பு)

1.3 அமைச்சினால் குறிக்கப்பட்டுள்ள விசேட விஞ்ஞான உபகரணங்களும், இரசாயனப் பொருட்களும் பின்னிணைப்பு 3இல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியல் [illegible] ஏற்படும் பொழுது மீளாய்வு செய்யப்படும்.

1.4 அமைச்சினால் குறிக்கப்பட்டுள்ள் விஞ்ஞான உபகரணங்களும், இரசாயப் பொருட்களும் தவிர்ந்த, பின்னிணைப்பு 1,2 இல் காட்டப்பட்டுள்ள எல்லா விஞ்ஞான உபகரணங்களையும், பகிர்ந்தளித்தலும் உங்களின் முழுப்பொறுப்பாகும்.

1.5 இவ்வாறு உம்மால் பெறப்பட்ட விஞ்ஞான உபகரணங்களும், இரசாயனப் பொருட்களும் தேசிய கல்வி நிறுவகத்தின் நியமங்களுக்கு அமைவானதாக இருக்கவேண்டும். இந்நியமங்கள் 2ஆம், 4ஆம் பின்னிணைப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

1.6 30 மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பிற்கு வழங்க வேண்டிய ஒவ்வொரு உபகரணங்கள் சம்பந்தமான அளவே பின்னிணைப்பு 1இலும், 2இலும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் செய்து காட்டல் தேவைகளுக்கான உபகரணங்களை பொறுத்த மட்டில் ஒவ்வொரு பொருள் பற்றியும், பெறவேண்டிய அளவுபற்றியும் [illegible] மாகாண விஞ்ஞானகணித வழிநடத்தல் குழுவின் இணைப்புக் காரியதரிசியிடமிருந்து விதப்புரையை பெதல் வேண்டும்.

மேலும் மாகாண விஞ்ஞான கணித வழிநடத்தல் குழுவின் இணைப்புக் காரியதரிசியிடமிருந்து பின்வருவனபற்றிய உறுதியுரை பெறுதல் வேண்டும்.

1. தேசிய கல்வி நிறுவகத்தினால் அனுமதிகப்பட்ட (பின்னிணைப்பு 1,2ல் **உள்ள**) விஞ்ஞான உபகரணங்கள் தேவைகள் அடங்கிய நியமப் பட்டியலில் உள்ளதாக இருக்க வேண்டும்

2. இந்தச் சுற்றுநிருபத்திலுள்ள 2,4 பின்னிணைப்புகளில் கூறப்பட்டுள்ள நியமங்களுக்கு அமைய வேண்டும்.

3. பின்னிணைப்பு 111ல் காட்டப்பட்டுள்ள அமைச்சினால் பெறப்படும் விஞ்ஞான உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் அடங்கிய பட்டியலிற் சேர்க்கப்படாததாக இருக்க வேண்டும்..

1.8 ஒவ்வொரு வருட முடிவிலும் உம்மால் அவ்வருடத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட விஞ்ஞான உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் என்பனவற்றின் பெயர்ப்பட்டியலையும், அத்துடன் ஒவ்வொரு பொருளுக்கும் கொடுக்கப்பட்ட விலையையும் தயவு செய்து அமைச்சின் விஞ்ஞான கிளைக்கு அனுப்பவும். அமைச்சினால் கொள்வனவு செய்யப்படும் குறிப்பிட்ட பட்டியலை மீளாய்வு செய்வதற்கு மேலே காட்டப்பட்ட தகவல் தேவையாயுள்ளது.

1.9 பின்னிணைப்பு 1,2,4 என்பவற்றைப் பொறுத்தமட்டில் ஏதேனும் திருத்தங்களை நிர் சிபார்சு செய்ய எண்ணின் அத்திருத்தங்களை தயவு செய்து அமைச்சின் விஞ்ஞானக் கிளைக்கு அறிவிக்கவும். இத்திருத்தங்கள் பின்னிணைப்புக்கள் 1,2 இல் விஞ்ஞான உபகரணங்கள், இரசாயனப்பொருட்களைச் சேர்ப்பதையும், நீக்குவதையும் பொறுத்ததாகும். திருத்தங்களை சிபார்சு செய்யும்பொழுது அதற்குரிய காரணங்களையும் கொடுக்கவும்.

2.0 <u>விஞ்ஞான உபகரணங்கள் பகிர்ந்தளித்தல்</u>

இனிமேல் விஞ்ஞான உபகரணங்களையும், இரசாயனப் பொருட்களையும் பகிர்ந்தளித்தல் உம்முடைய கடமையாகும். அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட விஞ்ஞான உபகரணங்களும், இரசாயனப் பொருட்களும் விநியோகத்திற்காக உம்மிடம் அனுப்பப்படும்.

அமைச்சினுடைய மத்திய விஞ்ஞானக் களஞ்சியத்திலிருந்து விஞ்ஞான உபகரணங்களும், இரசாயனப் பொருட்களும் நேரடியாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட மாட்டாது.

3.0 <u>தேசிய பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள் வழங்குதல்</u>

தேசிய பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்களும் இரசாயன பொருட்களும் வழங்கப்படுதல் தொடர்பாக தனியான அறிவுறுத்தல்கள் பின்பு அனுப்பப்படும். எவ்வாறாயினும் பின்னிணைப்பு 1லும், 2லும் பட்டியல்படுத்தப்பட்டதும், பின்னிணைப்பு 4ல் கூறப்பட்ட நியமத்திற்கேற்ற விஞ்ஞான உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் மட்டும் தான் தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்படும்.

4.0 <u>மாகாண விஞ்ஞானக் களஞ்சியங்களை நிறுவுதல்</u>

மேலே 1.0, 2.0, பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவியாக மாகாண, விஞ்ஞானக் களஞ்சியங்களை நீங்கள் நிறுவுதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது பற்றி எனது 1990/4 இலக்கம் கொண்ட விஞ்/எபி இலக்கமும் 11.01.1990 ஆம் தேதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் வாயிலாக ஏற்கனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. தயவு செய்து அதிலுள்ள பிரிவு 7ஐப் பார்க்கவும். பாடசாலைகள் மாகாண விஞ்ஞானக் களஞ்சியங்களைப் பயன்படுத்தக்கூடாது.

5.0 <u>சிறு விஞ்ஞானகூடங்கள் வழங்குதல்</u>

சிறு விஞ்ஞான ஆய்வுகூடங்களை வழங்குவதன் மூலம் பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. சிறு விஞ்ஞான ஆய்வுகூடங்களைப் பெறுவதற்கான நிதி, கொடைவள்ளல்கள், வெளிநாட்டுதவி, பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிதிபோன்ற மாற்று மூலங்களிலிருந்து பெறப்படல் வேண்டும்.

6.0 <u>பல்வேறு நிறுவனங்கள், செயற்றிட்டங்கள் என்பவற்றின் மூலம் . விநியோகிக்கப்படும் விஞ்ஞான உபகரணங்கள்</u>

பல்வேறு அரசாங்க, அரசாங்கப் பற்றற்ற நிறுவனங்கள், செயற்றிட்டங்கள் என்பனவும் அரசாங்கப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள், இரசாயனப் பொருட்களை என்பவற்றை வழங்குகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வழங்கப்படுகிற அத்தகைய விஞ்ஞான உபகரணங்களும் இரசாயப் பொருட்களும் 4 ஆம் பின்னிணைப்பில் உள்ள நியமங்களுக்கு அமைவானதாகவும், 1ஆம், 2ஆம் பின்னிணைப்புக்களில் பட்டியல்படுத்தப்பட்டனவாகவும் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

7.0 விஞ்ஞான உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் பெறுதல், பகிர்ந்தளித்தல் தொடர்பாக இதற்கு முன் என்னால் வழங்கப்பட்ட 1990/13, 1992/10 எண் கொண்ட சுற்றறிக்கைகள் இத்தால் செயல் இழக்கச் செய்யப்பட்டுள்ளன.

ஒப்பம்: எம். வி. கே. வேரகொட
செயலாளர்
கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள்
அமைச்சு

பிரதிகள்:
1. மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
2. மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
3. மாகாண விஞ்ஞான, கணித வழிநடத்தல் இணைப்புக் குழுவின் செயலாளர்கள்
4. உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (விஞ்ஞானம்)
5. உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் (விஞ்ஞானம்)
6. கணக்காளர் / உள்ளகக் கணக்காய்வு - கல்வி, உயர்கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு
7. கணக்காய்வாளர் நாயகம்